மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்தும் பரிசீலனையில் உள்ளன. ஆனால், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அவை கண்டிப்பாக மிகவும் அவசரம் என்றால், அவர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியில்--M.L.A. fund-இல் இருந்து எடுத்து உபயோகித்து, விரைவில் செயல்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 89, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. சிவராஜ், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

89—

கால்நடை மருத்துவமனை

***790—திரு. சு. சிவராஜ்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ரிஷிவந்தியம் ஒன்றியம், சீர்ப்பனந்தல் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) விழுப்புரம் மாவட்டம், ரிஷிவந்தியம் ஒன்றியம், சீர்ப்பனந்தல் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு தற்போது ஏதுமில்லை.

(ஆ) எழவில்லை.

திரு. சு. சிவராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்ப்பனந்தல் கிராமம் என்பது, சுற்றிலும் ஏறத்தாழ 20-க்கும் மேற்பட்ட மிகப் பெரிய கிராமங்கள் அடங்கிய பகுதி. அந்தப் பகுதியிலே பல்வேறு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், தனியார் பால் குளிரூட்டும் நிலையம் போன்றவை எல்லாம் இருக்கின்றன. இந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய கால்நடைகள் நோயுற்றால், 15 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள வானாபுரத்திற்கும் அல்லது 30 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சங்கராபுரத்திற்கும் செல்லவேண்டிய சூழ்நிலை இருக்கின்றது.

2006 ஆகஸ்ட் 24]

ஆகவே, அந்தப் பகுதியினுடைய அவசியம் கருதி, உடனடியாகக் கால்நடை மருத்துவமனை அங்கே தொடங்காவிட்டாலும்கூட, உடனடியாக அங்கே ஒரு Sub Centre-ஐத் திறப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று உங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கிராமத்தில் ஏற்கெனவே ஒரு கிளை நிலையம் செயல்பட்டு வருகிறது. கடந்த ஆட்சிக் காலத்தில் பணியாளர்கள், குறிப்பாக, கால்நடை ஆய்வாளர்கள் நியமனம் செய்யப்படாமலேயே இருந்த காரணத்தினால், அந்தப் பணியிடம் இப்பொழுது நிரப்பப்படாமல் உள்ளது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கைக்குப்பின், இப்பொழுது இன்றிலிருந்து தொடர்ந்து ஐந்து நாட்களும் கால்நடை ஆய்வாளர்கள் அந்தக் கிராமத்திற்குத் தினமும் நேரடியாகப் பார்வையிட்டு, மருத்துவச் சிகிச்சைகள் கால்நடைகளுக்குக் கிடைக்க இத்துறை நடவடிக்கை எடுத்துள்ளது.

(முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் யசோதா. (குறுக்கீடு) திருமதி யசோதா, கொஞ்சம் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவராஜ்.

திரு. சு. சிவராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கிளை மையம் என்பது பகுதிநேரமாகச் செயல்படும் என்று அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். அது முழுநேர மையமாகச் செயல்படுவதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை இந்த அரசு பரிசீலனை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுமையும் இருக்கின்ற சில கால்நடை மருத்துவமனைகள் வாடகைக் கட்டடத்தில் இன்றைக்கும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அப்படி எத்தனை மருத்துவமனைகள் வாடகைக் கட்டடத்தில் இயங்கிக்

கொண்டிருக்கின்றன? 2006–2007 ஆம் நிதியாண்டில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிக்கொண்டிருக்கின்ற அந்த மருத்துவமனைகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தரும செயற்குறிப்பு அரசிடம் இருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்குத் தனி வினா எழுப்பினால், அதற்குரிய விளக்கங்களுடன் பதில் அளிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமச்சந்திரன்.

திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தளி சட்டமன்றத் தொகுதி என்பது காட்டுப் பகுதியைக் கொண்ட விசாலமான பகுதி. இந்தப் பகுதிக்குட்பட்ட ஆனைக்கல்லு ஊராட்சியில் தொட்டபேளூர் என்ற கிராமத்தில் சுமார் 15,000–க்கும் மேற்பட்ட கால்நடைகள் உள்ளன. அந்தப் பகுதியிலே 20 கிலோ மீட்டர் தொலைவிலே எந்தக் கால்நடை மருத்துவமனையும் இல்லாத காரணத்தால், தொட்டபேளூர் கிராமத்திலே கால்நடை மருத்துவமனை அமைத்துத் தர இந்த அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும் அந்தக் கிராமத்தில் அரசு விதிமுறைகளுக்குட்பட்டு, கால்நடைகளுக்கு மருத்துவ சிகிச்சை கிடைக்காமல் இருந்தால், அரசு ஆய்வு செய்து, அதைப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பதமாவதி.

திருமதி பி. பத்மாவதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்னிலம் ஒன்றியம், 15–பனங்குடியில் கால்நடை மருத்துவமனை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையின் சார்பிலே முதற்கட்டமாக கால்நடைக் கிளை நிலையம்தான் அமைத்துத் தரப்படுகின்றது. பின்பு, தினமும்

2006 ஆகஸ்ட் 24]

கிட்டத்தட்ட 40-க்கும் கூடுதலாகக் கால்நடைகள் சிகிச்சைக்கு வந்தாலோ, அந்தக் கிராமத்திலோ அல்லது அங்கு சுற்றியுள்ள கிராமங்களில் 10,000-க்கும் மேற்பட்ட கால்நடைகள் இருந்தாலோதான் கால்நடை மருத்துவமனை அமைக்க இயலும். ஆதலால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை, அதற்கேற்ப அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 90, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. எதிரொலி மணியன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

90—

கால்நடை துணை மருத்துவமனை

***1158—திரு. கோ. எதிரொலி மணியன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், கீழ்வெள்ளியூர் கிராமத்தில் கால்நடை துணை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், தெள்ளாறு ஊராட்சி ஒன்றியம், கீழ்வெள்ளியூர் கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் துவக்க தற்போது அரசுத் தரப்பில் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

திரு. கோ. எதிரொலி மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைகளைப் பராமரிப்பதற்குத் தற்போது ஒன்றியங்களிலே இருக்கின்ற கால்நடை மருத்துவமனைகள், துணை மருத்துவமனைகள் அதிகப்படுத்த முடியாத இந்தச் சூழ்நிலையில் ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே ஓர் ஒன்றியத்திற்கு ஒரு கால்நடை விரிவாக்க அலுவலரை நியமித்து, அவரிடம் 10,000 ரூபாய் மதிப்புள்ள மருந்துகளைக் கொடுத்து, அந்த ஒன்றியத்திற்குட்பட்ட அனைத்துக் கிராமங்களுக்கும் அந்தப் பணியாளர்கள் நேரடியாகச் சென்று கால்நடைகளுக்குத் தடுப்பூசி